மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.
10
1094
1094
(4484)

சிவமயம்.

# நந்திக்கலம்பகம்

## மூலபாடம்.

இஃது

ஷை அரசனது கநிஷ்டராற்செய்யப்பட்டது.

இதனை

வித்தியார்த்திகள்பலரும் கேட்டுக்கொண்டதின்பேரில்

ஒருவாறு பரிசோதிக்கப்பட்டு

புரசைப்பாக்கம்

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஆங்கிரச ஹு ஆனிமீ".

# பிரசித்தப்பத்திரிகை.

இதனாற் சகலருக்குந் தெரிவிப்ப தியாதெனில்

இப்பொழுது அச்சிட்டிருக்கிற புத்தகங்கள்

| | |
|---|---|
| அரிச்சந்திரபுராணம் | மூலமும் உரையும் |
| சுந்திரகாண்டம் | மூலமும் உரையும் |
| ஸ்ரீமேசுரஉள்ளமுடையான் | மூலமும் உரையும் |
| குமாரசுவாமியம் | மூலமும் உரையும் |
| சிநேந்திரமாலை | மூலமும் உரையும் |
| சாதகசிந்தாமணி | மூலபாடம் |
| சந்தானதீபிகை | மூலபாடம் |
| சருவார்த்தசிந்தாமணி | மூலபாடம் |
| உரோமரிஷிவிநாடிபஞ்சபட்சி | மூலபாடம் |
| பஞ்சபட்சிபலதிரட்டு | மூலபாடம் |
| பாராசரியம் | மூலபாடம் |
| மணிகண்டகேரளம் | மூலபாடம் |
| துய்யகேரளம் | மூலபாடம் |
| இரேகைசாஸ்திரம் | மூலபாடம் |
| சந்திரகாவியம் | மூலபாடம் |
| ஜயமுனிசூத்திரம் | வசனகாவியம் |
| நந்திக்கலம்பகம் | மூலபாடம் |
| தேரையர் வயித்தியம் | ரு,க |
| நாலுகாண்டஜாலம் | கூஉ௱ |
| போகர் | அ௱ |
| கருவூரார்பலதிரட்டு | க.௱ |
| இராமதேவர்சிவயோகம் | உ௱ |
| நந்தீசுரர் | க_௱ |
| இராமதேவர் | ௫௱ |
| பூகிமாமுனிவைத்தியசிந்தாமணி | அ௱ |
| மதிவெண்பா | ௱ |
| அகஸ்தியர் குருநாடி | ௱ |
| சட்டமுநியார் முன்ஞானம் | ௱ |
| சட்டமுநியார் பின்ஞானம் | ௱ |
| சுப்பிரமணியர் சுத்தக்ஞானம் | ௱ |
| சோழராஜநாடகம் | தமயந்திநாடகம் |
| சதமுகராவணன்கதை | |
| தமயந்திமாலை | |

இவைவேண்டியவர்கள்-சென்னைப்பட்டணம்புரசைப்பாக்கத்தைச் சார்ந்த நாராயணன்பாளையம் (சஉ) வது கதவிலக்கமுள்ளவீட்டில்ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற விவேகவிளக்க அச்சுக்கூடத்தலைவர், பு - ஏழுமலைப்பிள்ளையவர்களிடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

மேற்படி புத்தகங்களை அச்சிட்டவர்களையன்றி வேறொருவர் அச்சிடுவார்களாகில்கவர்நர்மெண்டாருடையஆக்டின்படிநடத்தப்படும்.

உ

சிவமயம்.

# நந்திக்கலம்பகம்

## மூலபாடம்.

### பாயிரம்.

விருத்தம்.

ம்மைப்புவனமுழுதீன்ற முதல்வியோடும்விடைப்பாக
ம்மைத்தருகமுத்தமென வழைப்பவாங்கேசிறிதகன்று
ம்மின்முத்தங்கொளநோக்கிச் சற்றேநகைக்கும்வேழமுகன்
சம்மைமுளரிமலர்த்தாளென் சென்னிமிசையிற்புனைவாமே. (க)

வேறு.

பொருப்பனையன்மடப்பாவைப் புணர்முலையின்முகடுதைக்க
நெருப்பாறுவெளியாக நீறணிந்தவனைவாழ்த்தும்
பருப்புரசைமதயானைப் பல்லவர்கோனந்திக்குத்
திருப்பெருகவறுமுகன்றன் செழுமலர்ச்சேவடிதொழுவாம் (உ)

வெண்பா.

திருவாணியைக்குருவைத் தென்முனியைப்போற்றத்
தருவாணியாண்மையிறை சாரு - முருவாணி
யைங்கரனைச்சங்கரனையாறுமுகத்தோனுமையைப்
பங்கில்வைப்பார்க்கில்லை பவம். (௩)

மயங்கிசை-கொச்சகக்கலிப்பா.

மண்டலமாயம்பரமாய் மாருதமாய்வார்புனலா
யொண்சுடராயொளியென்னு மோருருவமூன்றுருவ
மால்வடிவோவளைவடிவோ மாகதத்தின்கார்வடிவோ
சேல்வடிவோபொன்வடிவோ சிவனேநின்றிருமேனி
அருவரையினகங்குழைய வவணதமர்தெரிந்தவுணர்
பொருமதிள்களவைகண்டப் பொன்றிவித்தபுனிதர்க்கும்
குருமணிசேர்மணிமுறுவற் குலக்கன்னிகைநதிபாயன்
றிருமுடியைக்கொடுத்தார்க்குஞ் செம்பாகந்திறம்பித்தே
இலங்கொளியமுவிலைவே லெல்லாளின்னியற்கயிலைக்
குலகிரியுமருமறையுங் குளிர்விசும்பும்வறிதாக
அலர்கதிர்வேலுடைநந்தி யவனிநாராயணனு
முலகுடையான்றிருமுடியு முள்ளமுமேயுவந்தனையே. (௪)

தாவுகள்.

செழுமலர் துதியிரு தெறிகணை மதனன
தெழிலுடல் பொடிபட மொருதிரு நுதலினை
அருவரையடியெழ முடுகியவவுணன்
ஒருருபதுமுடியற வொருவிரனிறுவினை
வாசிகையுங்கொன்றையும் வெள்ளெருக்கும் விரைதொடுத்த
வாசிகையினூடே வெண் மதிக்கொழுந்தைச் சொருகினையே
பாய்புலியினுரியசைத்த பலபுள்ளிப்படிவமெல்லா
மாயிரவாய்க்கருங்கச்சை யழலுமிழவிசைத்தனையே
சோர்மதத்தவார்குருதிச் சோனைநீரொனத்துளிப்ப
வேர்மதத்தக்கரியுரிவை யேகாசமிட்டனையே
திசைநடுங்கத்தோன்றித்து நீயுதைத்தவெங்கூற்ற
மேனைத்தத்துவமுநீ யெவ்வுயிர்க்குமிறைவனுநீ
யூழிநீ யுலகுநீ யுருவுநீ யருவுநீ
யாழிநீ யமுதநீ யறமுநீ மறமுநீ
எனவாங்குதனிச்சொல். (ரு)

பாயிர-முற்றிற்று.

நேரிசையாசிரியப்பா.

ஒருபெருங்கடவுளைப் பரவுதுமெங்கோன்
மல்லைவேந்தன் மயிலைகாவலன்
பல்லவர்தோன்றல் பைந்தார்நந்திக்கு
வடவரையளவுந் தென்பொதியளவும்
விடமுடமங்கல விசையமுநடப்ப
ஒருபெருதனிக்குடைநீழ
லரசுவீற்றிருக்குவ னேகோவெனவே. (க)

வெண்பா.

எனதேகலைவளையு மென்னதேமன்னர்
சினவேறுசேர்ந்தனிதோ னந்தி - யினவேழங்
கோமறுகிற்சீறிக் குருக்கோட்டைவென்றுடும்
பூமறுகிற்போகாப்பொழுது. (உ)

கலித்துறை.

பொழுதுகண்டாய்திறக்கின்றதுபோகநம்பொய்யர்க்கென்றுந் [பு
தொழுதுகொண்டேனென்றுஞ் சொல்லுங்கண்டாய்தொல்லைநூல்வரம்
முழுதுங்கண்டானந்திமல்லையங்கான்றமுதல்வனுக்குப்
பழுதுகண்டாயிதைப்போய்ப்பகர்வாய்சிறைப்பைங்குருகே. (ங.)

விருத்தம்.

குருகுதிர்முன்பனிக்கொதுங்கிக்கூசுங்கங்குல்
குளிர்நிலவேதோய்ந்தெழுந்தநறுந்தண்வாடை

## நந்திக்கலம்பகம் மூலபாடம்.

யருகுபனிசீதமவாவஞ்சுவாளை
யஞ்சேலென்றுரைத்ததாலழிவதுண்டோ
திருகுசினக்கடாக்களிற்றுச்சேங்கோனந்தி
தென்னவர்கோன்றன்குறும்பிற்செறுநர்சூழ்ந்த
சுரிகைவினைப்பகைவருடறுண்டமாக்கித்
துயிலுணர்ந்தவல்லாண்மைத்தொண்டைவேந்தே. (௪)

வேறு,

தொண்டைவேந்தன்சோணாடன்
றென்னீரல்லைமுன்னிருவர்
கொண்டைவேந்தர்கொண்மின்க
ளென்றுங்கன்னிக்கடுவாயே. (௫)

சந்தவிருத்தம்.

கடுவாயிருட்டவளைவிம்மமன்னோர்கழல்சூழ்வதங்கண்மறுகே
யடுவார்மருப்பினயிராவதததினடுபோர்செய்நந்திவருமே
கொடுவார்புனத்துக்குதவார்படைக்கண்மடவாளிடைக்குண்மனமே
வடுவேயிருக்குமகளேயிம்முன்றிள்மணியூசலாடமறவே. (௬)

புயவகுப்பு.

மறமதகளிதிசைநிறுவினைமணிநகையவர்மனங்குழைவன
விறலரசர்கண்மனநெறிவனவிரைமலர்கணிமுலைபொருவன
திறனுடையனதொடைபுகழ்வனதிகழொளிநகைதரதழைவன
நறுமலரணியணிமுடியனநயமமர்நின்றிருப்புயமதே. (௭)

விருத்தம்.

புயங்களிற்பூவைமார் பொங்குகொங்கையி
னயங்கொளத்தகுபுகழ் நந்திகச்சிசூழ்
கயங்களிற்கடிமலர் துளாவிக்காமுகர்
பயங்கொளப்புகுந்தது பருவவாடையே. (௮)

தாழிசை.

வாடைவந்துநோகவீசு மாரன்வாளிகூருமா
லாடலோதமாகுமாலெ னுவிகாக்கவல்லனோ
வேடுலாவுமாலைசேரி ராசவல்லவுந்ததோள்.
கூடினல்லவாவராது கொங்கைவிம்முகோதையே. (௯)

.விருத்தம்.

கோதைசோரிசொரிகொங்கைவிம்மல்விம்முகுறுமுறுவற்
சோதிவெளுக்கில்வெளுமருங்கிற்துவளினீயுந்துவள்கண்டாய்
காதுநெடுவேற்படைநந்திக்கண்டன்கச்சிவளநாட்டு
மாதரிவரோவிருக்கின்றவாளிமற்றென்மடநெஞ்சே. (௰)

# நந்திக்கலம்பகம் மூலபாடம்.

## சந்தவிருத்தம்.

நெஞ்சாதுகுமுற்றிநின்மேவியதன்
  னிலவின்கதிர்நீளெரியாய்விரியத்
துஞ்சாய்துடிசோருமிவட்கிருளத்
  தொழுகின்றதுதொண்டையர்கோவினையோ
செஞ்சாலிவயற்படர்காவிரிசூழ்
  திருநாடுடைநந்திசினக்கவியன்
வெஞ்சாயன்மறைதததனிக்குடையான்
  விடைமண்பொறியோலைவிடேல்விடுதே. (௯௧)

## கலித்துறை.

விடுதீர்கொல்லோவளநாடுடைவீரரசர்க்குமுன்னின்
றிடுதீர்கொல்லோபண்டிருக்குந் திரையெறிகானத்தும்மை
யடுதீர்கொல்லோர்திறனந்தியர்கோ னயிராவதத்தின்
படுதீர்கொல்லோபடைபன்னீ ரொன்றுமுங்கள்பாவனையே. (௯௨)

## விருத்தம.

வனைவார்குழல் வேணியும்வாடைகணீர்
நனைவார்துகிலும் மிவைநாளுமிரா
வினையார்கழ னந்திவிடேல்விடுகிற்
கனைவார்முர சொற்றதுகார்த்திரளே. (௯௩)

## தாழிசை.

அதிர்குரன்மணிநெடுந்தே ரவனிநான்றுனன்னகற்றின்
கதிரொளிவெண்மருப்பு வயிரமஞ்சொற்றதால்
மதுரைகொல்லோநந்தியர்கோ னகரிகொல்லோமாளிகைசாய்ந்
ததிரொதிரோகின்றதெவ்வூ ராங்கொலன்றியெம்மால்கெடவே. ()

## வெண்பா.

வேமன்மறைவா னகரான்பொற்கழல்வேந்தர்
தாமமுடிக்கணிந்தார் தாளிப்பூக்-கோமறுகிற்
பாவடிக்கிட்பல்லானைப் பல்லவர்கோனந்திதனற்
சேவடிக்கீட்காணலாஞ் சென்று. (௯௫)

## கலித்துறை.

சென்றஞ்சிமேற்செங்கண் வேழஞ்சிவப்பச்சிலர்திகைப்ப
வன்றுஞ்சினத்தா ரிணமறுத்தார்போலுமஃதஃதே
குன்றஞ்செய்தோணந்தி நாட்டங்குரக்குக்கொடையினமேற்
சென்றஞ்சப்பட்டதெல்லாம் படுமாற்றறினைப்பதியே. (௯௬)

## விருத்தம்.

பதிதொறும்பயில்பொழிலிருமணிதருபுனைபருமணிபகராநெற்
கதிர்தொறும்வருபுனல்கரைபொருதிழிதருகாவிரிவளநாடா

நிதிதருகவிகையுநிலமகளுரிமையுமிவையிவையுடைநந்தி
மதியிலியரசர்பின்மலரடியழிவிலாவானகமாள்வாரே. (௰எ)

விருத்தம்.

ஆட்குரங்கடற்படை யவனிகாரணன்
றோட்குலாமதுமலர்த் தொண்டைவாச்சியர்
வாட்குலாங்கண்ணினால் வளைத்தமம்மர்நோய்
மீட்குலாமடல்கயில் விரவுமாகினேன். (௰அ)

வேறு.

விரவாதமன்னரெல்லாம்விண்ணேறவெள்ளத்து
வெகுண்டோரொனறைக்
கிரவாதசொலலாமிதெத்தேர்ந்துபாவமீ
ரொல்லீர்வாடை
வரவாதையுற்றிருந்துவருந்துவார்பலரொன்றும்
வாழிவாழி
பரவாதநந்திசெங்கோலிதுவாகிலேலற்பார்க்கும்
பரிசுநன்றே. (௰௯)

வேறு.

நன்றுன்னெடிதாயவிர்கின்றதிரா
வடுகின்றதுமாருதனாலமிதற்
கென்றின்னிலவென்னுமிளம்பிறையு
மெரியேசொரிகின்றதுயாதுசெய்கோ
மன்றின்னிலமேழுமனங்கபிரா
னடலுக்கிரமகோபனடங்கலர்போ
லின்றென்னுயிரன்பலகொங்கையைவிட்
டெங்கண்டுயில்கின்றனனேழையரோ. (௨௰)

வஞ்சித்துறை.

ஏழைமார்துணைவாழிநந்திதன்
னீழல்வெண்குடையூழிநிற்கவே. (௨௧)

விருத்தம்.

நிற்கமன்னவர்நிறைந்தவெண்குடை
யிடைந்தநீள்கடைநெடுந்ததாய்
விற்கொணண்ணுதன்மடந்தைமார்மிக
முயங்குதோளவனிநாரணன்.
நற்கொள்வார்மதிகச்சிநந்தியாய்
நலங்கொளன்னவரலங்கன்மே
லொற்கமெனமகளுணாசெய்தோவுல
களிப்பணித்திறலுணாத்திடேல். (௨௨)

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

### அகவல்.

உரைவரம்பிகழ்ந்த வுயர்புகட்பல்லவ
னமரர்கோமானடுபோர்நந்தி
யமர்வெள்ளாற்று மேவலர்கடந்த
செருவேலயர்வு பாடினன்கொல்லொடு
நறுநற்றுனியரசைச்சுற் றப்பொடுசிறப்பத்
தன்னுட்பல்கலை திரிந்தபாணறுந்தார்
பெற்றுகாதலித்த கானகத்தொன்றையின்
புதுப்பொலன்கல னணிந்துவீழ்தோளிய
ரன்னபோதினங்கனி யானையெருத்தமிசையோனே, ()

### விருத்தம்.

அன்னமடமயிலையாளிமதயானைநந்தியறியேன்
சொன்னபொருணல்குவள்ளல்தேருகுநீர்கொண்டவளநா
டன்னநடையாளையல்குற்பெரியாளையங்கையகல்வான்
மின்னைமெல்லியாளைபோலுமிடையாளைநோவமயிலே. (௨௪)

### வேறு.

மயில்கண்டான்மயிலுக்கோவருந்தியாங்கே
மான்கண்டான்மானுக்கோவாடிமாதர்
குயில்கண்டார்குயிலுக்கோகுழையீராகிற்
கொடுஞ்சுருபொக்கொளிநெஞ்சேகூடாமன்ன
ரெயில்கண்டார்குவலயங்கோனந்திவேந்தன்
றிறல்கொண்டாரிருங்கடம்பூராவிக்கொற்ற
வயில்கொண்டான்காவிரிநாட்டன்னவோடை
யதிசயிக்குநடையாளையகலநூற்றேன். (௨௫)

### வேறு.

நூற்கடற்புலவன் றுறைவெண்டிரை
நாற்கடற்கொருநாயகனந்திதன்
கோற்கடைப்புருவந்துடிக்குந்துணை
வேற்கடற்படைவேந்தர்தம்வீரமே. (௨௬)

### வேறு.

வீரதிண்விறல் வீரகஞ்சுகன் வெறியலர்செருவென்றோன்
பேரவுமாவுளநின்றவரன்பன்மற்றவன்பெருகுங்கடைநின்ற
சேரர்சோழரொடுதென்னரும்வடபுலத்தரசருந்திறைநந்தி
வீரமாமதிலைவிரியிவைவிலைவிரவலர்தகையாயரோ (௨௭)

### வேறு.

கமரிச்செங்நெற்காடணிசோலைக்காவிரிவளநாடன்
குமரிக்கொண்கன்கங்கைமணாளன்குளாகழல்விறனந்தி

யமரிற்றெள்ளாரஞ்சியநெஞ்சத்தரசர்கடிரள்போலு
மிவரிக்கானத்தேகியவாறென்னெழினகையிவளோடே. (௨௮)

ஊசல்.

ஓடரிக்கண்மடநல்லீ ராடாமோவூச
லுத்தரிக்கப்பட்டார்மேலாடாமோவூச
லேடவிழுமலர்க்குழலேகருங்கொண்மூமின்னூற்
றெழுந்தனபோற்சரியவாடாமோவூசல்
கூடலர்க்குத்தெள்ளாட்டிவின்னருளிச்செய்த
கோமுற்றப்படைநந்திக்குவலயமார்த்தாண்டன்
காடவர்க்குமுன்றோன்றன்கைவேல்பாடிக்
காஞ்சிபுரமும்பாடியாடாமோவூசல். (௨௯)

விருத்தம்.

ஊசல்மறந்தாலு மொண்கழலம்மானை
வீசமறந்தாலு மெல்லியலென்பேதை
பூசலிலங்கணைவேள் பொருகணைநந்திநின
பாசிலையந்தொடை யல்லதுபாடாளே. (௩௰)

வெண்பா.

பாடினரவரோ வேந்தர்பலராவி
பீடியமாகதத்தோர் பிச்சத்தார் - கூடிடார்
படையாறுசாயப் பழையாறுவென்றான்
கடையாறுபோந்தார் கலந்து. (௩௧)

விருத்தம்.

கலங்கொழியலங்கல்வேனந்தி கச்சிநாட்டொட்டண்கழல்
பொலன்கொழியநல்லோர்க்கு மாகலநின்றேற்கும்பொன்னூர்
நலங்கொளிப்பமுறுவன்முகஞ் சாய்த்துநாணுநின்றுமெல்லவே
விலங்கவில்லைவைத்தமென்றோக்கினிமேலுமுண்டோவினையேற்கே (௩௨)

கலித்துறை.

வினையின்சிலம்பன் பரிவுமிவடன் மெலிவுமென்பூந்
தினையும்விளைந்ததுகாணதுவாழிதெள்ளாற்றுநண்ணார்
முனையுமன்றேறமுனிந்தபிரான்முனையிற்பெருந்தேன்
வனையும்வடவேங்கடத்தார்தண்சாரலின்வார்புனமே. (௩௩)

விருத்தம்.

புனத்துநின்றவேங்கைமேற் புகைந்தெழுந்தவானையின்
சினத்தையன்றொழித்தகைச் சிலைக்கைதிரர்வீரமோ
மனத்துநின்றவெஞ்சின மலைத்தல்கண்டதிர்ந்தமான்
வனத்தகன்றதிர்ந்தகோப நந்திமல்லையார்ப்பதே. (௩௪)

வேறு.

ஆர்க்கின்றகடலோதமார்க்குமாறு
மசைகின்றவிளந்தென்றலசையுமாறுங்
கார்க்கின்றவிளமதியங்கூர்க்குமாறுங்
காணலாங்குருக்கோட்டைகாக்குமன்னர்
போர்க்கின்றபுகர்முகத்துக்குளிக்கவாளி
பூதலத்தில்வடிம்பலம்பல்பூண்டவில்லோன்
பாரக்கொன்றுஞ்செந்தனிக்கோற்பைந்தார்நந்திப்
பல்லவர்கோன்றன்னருள்யாம்படைத்தஞான்றே. (௩௫)

வேறு.

ஞான்றவெள்ளருவியிருவியெங்கள்போற்
றேன்றல்வந்திடிற்சொல்லுமின்னொண்சுடர்
போன்றமன்னவனந்திபூதலத்தணி
னீன்றவேங்கையிருங்கணிச்சூட்சியே. (௩௬)

விருத்தம்.

சூழியின்மதயானையின்பிடர்படிசுவடிவைசுருட்டின்கீழ்
வாழியின்னலமன்னர்வெந்தனுதினமிறைஞ்சியவடுக்கண்டோம்
ஆழிபன்னலவன்னையராச்சியாலடுங்குயிற்றடியிட்ட
பாழிமன்னெடுந்தோள்வடுக்கண்டிலம்பல்லவபகர்வாயே. (௩௭)

வேறு.

பகரங்கொணெடுந்தில்லைப்பணிவிசும்பிற்பறித்தெரியப்பண்டுமுன்னீர்
மகரங்கொண்டுக்கூலவனாதிரித்தமாலென்பர்மன்னர்யானை [ண்டை
சிகரங்கொள்போன்மடியத்தெள்ளாற்றுக்கண்சிவந்தான் றென்னன்றே
நகரங்கைபடுபிரானந்திரபதிபணிகோனங்கள்கோவே. (௩௮)

வேறு.

நங்கொற்றதெரிண்டைவேந்தனுமவேல்மன்னர்க்கெல்லாந்
தங்கள்கோனளகைநாடன்சந்திரகுலப்பிரகாசன்
றிங்கள்பொற்குடையினீழல்செய்யகோல்செலுத்துமென்ப
வெங்கள்கோல்வளைகணில்லாவிபரிதமறிந்தவாறே. (௩௯)

கலித்துறை.

ஆராவிலவந்தபேரார்முன்னம்பலம்பாடியப்பாற்
பாரார்களித்துயர்பல்லவர்கோனந்தியில்லைமன்றிற்
கூராதிவளிளங்கொங்கைபவன்வளர்தொண்டையல்லா
ரொாதிவடிருமேனியுநாமென்கொணுனுவதே. (௪0)

விருத்தம்.

நாணுகோளுந்திருமடவார்முன்னின்பொற்கழல்தொழுதாரிற்
பூணார்தோளிற்பொன்னூற்செய்தபுதுமன்றொண்டையருளாயே

வாணுளைச்சுழிக்களியானைப்படைவரவேயடையலர்குலகாலா
கோனுமைக்கொருகுறையுண்டோவுரைகொங்காநின்னதுசெங்கோலே.

வேறு.

செங்கோல்வளைக்கவிவளருந்துவண்டுசெய்யாமையாகுமெழிலா
ரங்கோல்வளைக்கைவளையாரிழப்பரரசாள்வதென்னவகையோ
தங்கோல்வளைத்ததிகழ்சேரர்சோழர்தமிழ்மன்னர்நின்றநிலமேல்
வெங்கோனிமிர்த்தவளையுஞ்சிவிர்க்கவிறனந்திமென்மொழிவையே. ()

வேறு.

மொழியார்தொண்டைப்பன்மலர்முற்றுந்தொறும்வந்து
விழியாளென்னுமேனிவெளுத்துனைமெலிவாளை
யொழியாவண்ணைகத்தண்ணருணந்தியூர்மாட்டோ
வழியாமங்குமாக்கடல்வடத்தொருவண்கோவே (௪௩.)

வேறு.

ஒருகோடிகணந்திபுரந்தயர்கோ
னுயர்நீள்வலையத்துயிர்வாளைவளைக்
குருகோடுவயற்படர்காவிரியின்
குலவும்புல்கண்டுபுகார்மனதிற்
பெருகோடுகெடுங்கழிசூழ்மயிலைப்
பெருமானதுபேரணியின்முடிமேற்
றருகோதைநினைந்தயர்வான்மெலியத்
தழல்வீசுவதேகுளிர்மாமதியே. (௪௪)

வேறு,

மதியமெரிசொரிய மாலையம்மாலை
மலர்ந்துபுலராதுகங்குலெல்லாங்கங்குற்
கதிர்செயணிவண்டுகொந்தாரம்பாடக்
களிவண்டுபூத்துலவுங்காலமாங்காலம்
பதியின்வளர்ந்தருளுந்தொண்டையங்கோனந்தி
பல்லவர்க்குநேரலர்தம்பாவையர்தம்பாவை
விதியின்வகைவிளைவுகண்டியாமிருப்பதல்லால்
வினையமற்றுமுண்டோநம்மேலோதிமாடல். (௪௫)

கலிப்பா.

மாட்டாதேயித்தனைநாண்மானந்திவானவனைத்தோ
டாட்டாதேமல்லையர்கோன்பரியானைப்பரிச்சுவடு
காட்டாதேகைதைப்பொழிலளவுங்காவிரிநீ
ராட்டாதேவைத்தென்னையாயிரமுஞ்செய்தீரோ. (௪௬)

விருத்தம்.

செய்யவாய்மிகக்கரியகண்வனமுலைசேர்ந்தார்மருங்கிற்கொம்பைப்
பையசாலவுங்கவரிதழல்குலுமதுமலர்க்குழலென்முல்

வெய்யவிப்பவியாதகுஞ்சரநந்திவீரியவனபேயாம்
மையநாமிவர்நகரிகைதொழுதி...நம்முயிரளவன்றே.    (சஎ)

கலித்துறை.

அளவுகண்டார்கருங்கைத்துணைபோளிமரசர்புகும்
வளவுகண்டார்நந்திமாலுதயன்வையந்தன்னின்மகிழ்ந்
தளவுகண்டாலன்னவெண்ணகைத்திருமிதென்னதுளரங்
களவுகண்டார்முகத்துக்கண்களாயகயற்குலமே.    (சஅ)

விருத்தம்.

குலமரபுமொவ்வாதுகுடித்தொழிலுக்கோவாடக்
குறையுங்கொற்றச்
சிலவிரவுஞ்சிந்தியாத்தெள்ளாற்றிற்செருவென்ற
செங்கோனந்தி
புலவரரைப்புறங்கண்டபுகழ்சேர்கோவே
பூவலயந்தனிற்கரியநின்றமன்னே
சொலவரியதிருநாமமுனக்கேயல்லாற்
சொல்லொருவற்காசையுமோதொண்டைக்கோவே (சகூ)

வேறு,

கோவேமாலைமாலையர்க்கோகோவேவேண்டுநிலவோகண்
கோவேமாலைமாலையதுகொண்டார்குருகும்வாறறியேன்
கோவேமாலைநீணமுடியோகொற்றநந்திகச்சியர்
கோவேமாலையுள்ளுமெங்கள்கோவேகம்பரானுரே.    (ருய)

வேறு.

ஆவிடுமாமைபணிகோடுமேனியலரிடுகவருமயலோர்
போவதிகசங்குபுறங்குகசெரிபொருபுணருஞ்சங்குவளைமே
ஞவிடருகானவளமயிலையாதிநயவானுமெங்களளவே
யேவுகொடிநாகையிவையாவையும்வஞ்சியினியுலகில்வாழ்வதுளவோ

வெண்பா,

உளவேகொடியமருங் குண்டில்லையென்னி
விளமுலைகளெவ்வாறிருக்கும் - இளரொளிய
தெள்ளிலைவேற்கண்ணிறைய்தெள்ளாற்றிவென்றகோன்
றண்மலையத்தன்னுடனக்கு,    (ருஉ)

விருத்தம்,

சனக்குரியவெண்கொங்கைதான்பயந்தமழுகளிற்றிற்ருக்கிற்றன்பா
னெனக்குரியமார்பதையுமெங்கையற்கேயாக்கினுனிகல்வேன்மன்னர்
சினக்கரியும்பாய்மாவுந்தெள்ளாற்றிற்சிந்துவித்தசெங்கோனந்தி
மனக்கினியானவனிட்டவழக்கன்றேவழக்கிந்தவையத்தார்கே. (ருங)

வேறு.

தார்வட்டக்களிமருவும்விசாரத்தளரிடைத்தையல்வஞ்சிக்கின்
றோர்வட்டத்தண்மதிவெள்ளிக்குடைகொடிதென்றலதுபழுதன்றே
போர்வட்டச்சிலைபடையுடைநந்திப்பொருகடன்மல்லைப் புரவலனேயிப்
பாரவட்டத்தனிமதயானைக்குடையுடையாய்பல்லவரடலேறே. (௫௪)

வேறு.

அட்டலேறுவலத்துயராவைபிரானடலுக்ரமகோபனடங்கலரை
மடலேறிடவாகைபுனைந்தபிரான்வடவேங்கடநாடுடைமன்னர்பிரான்
பெடையேறுநெடுங்களிசூழ்மயிலைப்பெருமானதுயோருளின்றூடிமேன்
மிடலேறியகோதைநினைந்தயர்வான்மெலியத்தழல்வீசுகமாமதியே. ()

தாழிசை.

மலர்க்குழல்தாவிமேல்வண்டார்க்குங்காலம்
வரிக்குயின்மாவிளந்தளிர்கட்கொதுங்குங்காலஞ்
சிலர்க்கெல்லாஞ்செழுந்தென்றலமுதளிக்குங்காலந்
தீவினையேற்கித்தென்றல்வீசுங்காலம்
பலர்க்கெல்லாங்கோனந்திபண்பாட்கச்சி
பனிக்கண்ணுற்பருமுத்தம்பார்த்தாடுங்கால
மலர்க்கெல்லாமைங்கணைவேளலர்தூற்றுங்கால
மகன்றுபோனவர்நம்மையயர்த்துவிட்டகாலம். (௫௬)

சந்தவிருத்தம்.

காலவினைவாணர்பயில்காவிரிநன்னாட்டா
சூலமொருகோலினினடாவுகளனந்தி
நீலமயில்கோதையிவணின்னருள்பெறுளோற்
கோலவளைகோடலிதுமன்னர்புகழன்றே. (௫எ)

விருத்தம்.

புரதலநந்திபொன்னிநன்னாட்டுமன்னன்
வரமயில்போற்சாயல்வாணுதற்சேடிதானுங்
குரவலர்பொழிலிற்கோட்டிடையில்லையாகி
விரவலர்மலருக்கில்லையோநல்குவேனே. (௫அ)

வேறு.

நல்குநந்தியின்றுனிலங்காவலன்
மாரவேணளிர்மூத்த
மல்குவெண்குடைப்பல்லவர்கோளரி
மல்லியந்திண்டோண்மேன்
மெல்குதொண்டையுந்தந்தருள்கிலன்விடை
பணியவற்றெருடுவிடியா

வல்லனோடும்வெண்டிங்களோடுமுன்னுளம்
பனையுய்வதெவ்வகையறியேனே, (௫௯)

வேறு.

அறம்பெருகுந்தனிச்செங்கோன்மாயன்றொண்டை
யங்களிற்போற்சிவந்தாறுமுகமும்பூத்து
மறிந்துளவேகருங்கங்குலத்துப்பித்த
மருவிவளருந்திருவயிறுலாகும்
தறிந்திருக்கும்பருவெண்புவடிக்கதாகித்
தாணெடியவேய்த்தொடித்தோணோர்தந்தெம்மைச்
செறிந்துளவேமுலைசிலையேபுருவமாகி
லவர்நம்மைச்சிந்தைநோய்திருத்திஞரோ, (௬௦)

ஆசிரியப்பா.

திருவின்செம்மைமிலமகளுரிமையும்
பொதுவின்றியாணடபொலனுடைப்
பல்லவூர்தாடுணையாகமாவேண்டுட
னவ்வாற்றுவேலர்கடந்தவன்றுணந்திமின்
றிருவருநெடுங்கண்சிவக்குமாகிற்
செறுநர்சேரும்பதிசிவக்குமேசிறங்கிளர்
புருவந்துடிக்குமிணங்கழிநிறைஞ்சா
மன்னரிடந்துடிக்குமெய்யில்வாளுநை
கழிக்குமாகிற்பின்னடங்காப்பெண்டீர்
பூண்முலைமுத்தம்பூணழிக்குமேகடுவர்போல
வளையநின்றெடுமெருவலர்மன்னர்
துடிக்குமேயாமதயானைப்பண்ணின
மதிரமன்னுநென்னெதிர்மலைந்தோர்க்கே. (௬௧)

வெண்பா.

ஊராதேயென்மகளைச் சொன்னீரோதொண்டைமேற்
பேராசைவைக்கும் பிராயமோ - நேராதா
ராழ்வலியராங்கொண்டகன்ஞாலமித்தனையு
மூழ்வலியராங்கொண்ட துய்க்கு, (௬௨)

கலித்துறை.

துயக்குவித்தான்றுயில்வாங்குவித்தான்றுயில்வித்திவளை
மயக்குவித்தானுள்ளம்வஞ்சனையான்மலர்க்காலகத்துத்
துயக்குவித்தான்றுயில்வாங்குவித்தான்றுயில்வித்திவளை
மயக்குவித்தானந்திமானேதயனென்றுவட்டிப்பனே, (௬௩)

விருத்தம்,

வட்டன்றேமிகவுங்காணீமின்மற்றைக்கை
கொட்டினேன்மாபின்வித்தோன்

மிட்டன்றேபழம்பழுப்பித்துண்ணக்காண்மி
னிவையயல்சாம்பிரதமிகலிற்றெள்ளாற்
றட்டன்றேபொன்வைகைமுனிந்தநந்தி
யவனிநாராயணனிப்பாராயுங்கோமான்
குட்டன்றேமறைநீர்த்தடங்கொண்டு
குளாகடலைக்குடிக்கின்றேன்குடிக்கின்றேனே, (௬௪)

கலித்துறை.

குடக்குடைவேந்தனன்றுடைமன்னன்குணக்கிறெடு
வடக்குடையானந்திமானேதயனிந்தவையமெல்லாம
படைக்குடையேந்தியபல்லவன்றன்னெடுபாரறியத்
தடைக்குடையாரையல்லாற்சுடுமோவிச்சுடர்ப்பிறையே. (௬௫)

விருத்தம்,

பிறைதவழ்செஞ்சடைப்பிறங்கலூரண
னறைகழல்முடித்தவனவனிநாரண
னறைகெழுந்தொண்டையோன்றெண்டைக்கண்டபின்
னிறைகெழுஞ்சங்குயிரிவளுக்கிந்ததே, (௬௬)

வேறு.

ஈகின்றதுபுவனந்தனையாளும்பதியுமரு
ளாகின்றதுபருவம்மினியாரும்மஃதறியேன்
வாழ்கின்றதோர்புகழ்நந்திதன்வடவேங்கடமலைவா
யேகின்றதோருருவத்தொடுதிரிவாரதுதிறமே, (௬௭)

சந்தவிருத்தம்,

திறையிடுமினேரின்மதிவிடுமினுங்கள்
செருவொழியவெங்கண்முரசு
மறைவிடுமினிந்தவவனிதனிலெங்கு
மவனுடையதொண்டையரசி
னிறைவிடுமினந்திகழல்புகுதுமுங்க
ணெடுமுடிகள்வந்துமிகழத்
துறவிடுமினின்றியுறைபரியகன்று
தொழுகுதியுயந்தலரிதே. (௬௮)

வேறு.

அரிபயிலெனடுநாட்டத் தஞ்சனமுழுதாட்டிப்
புரிகுழன்மடமானைப் போதறவிட்டார்தா
நரபதியெனுநந்தி நன்மயிலாப்பூரி
லுருவுடையவ்வடாயர்க் குலகடுபகையுண்டோ (௬௯)

கலிப்பா.

பகையவனிப்பாரார்க்கும் பல்லவர்கோன்செங்கோலி
னகையும்வாண்மையும்பாடி நின்றுமெதங்கிக்குத்

தகையுநுண்ணிடையதிர்வார் வனமுலையற்றொடுமெட்டெய்ய
மிகையொடுகோத்திரர் முன்னிலைக்கூற்றினைவிலக்கவேண்டாவோ.()

விருத்தம்

வேண்டாரொன்னும்வேந்தமரர்க்கேமெய்யன்பு
பூண்டாரணங்காயன்றிவளென்றூர்பொல்லாதோ
மூண்டார்தெள்ளாற்றுள்ளேமூழ்கிமுனிவாறி
மீண்டார்நந்திக்கென்மகடோற்கும்வெண்சங்கே. (எக)

வெண்டுறை.

வெண்சங்குறங்கும்வியன்மாதர்முற்றத்துவெடிவேதான்
வண்சங்கொலிப்பவல்லிவிளையாடுமல்லைவேந்தன்
றண்சங்கோனந்திதண்குடைக்கிழ்வாரிற்
கண்சம்பிளியாநோயாமோகடவோமே. (எஉ)

விருத்தம்.

கடற்கூதிர்மொய்த்த கழிப்பெண்ணைநாரை
மடற்கூறுதோறு மலீர்கருங்கங்கு
லடற்கூடுங்கூர்வே லமையாதவாவை
திடற்கூறுவேற்கொல் சேதாவியுண்டோ. (எங)

வேறு.

உண்டிறையிற்செங்கழுநீருஞ்சிமாட்டே
யொண்பொழிலிற்சண்பகத்தார்தடவியோடித்
தண்டலையிற்பூங்கமுகம்பாளைதாவித்
தமிழ்த்தென்றல்புகுந்துலவுஞ்சேரனுடா
விண்டொடுதண்கிரியளவும்வீரஞ்செல்லும்
விடேல்விடுகநீதிடவும்வீதிதோறுந்
திண்டெறுகண்மாத்தொழுதபாவைமார்க்குச்
செங்கிகானல்லையோசெப்பிக்காணே. (எச)

வேறு.

பட்டவேந்தர்தம்பூணொடும்பாவைமார்
நாணொடுந்தெள்ளாற்றில்
வட்டவெஞ்சிலைநாணிடக்கழிந்தகார்
மலையிடமயிலன்னார்
விட்டகூந்தலும்விழியுநாண்முறுவலு
நுதன்மிசையிடுகோல
மிட்டபொட்டிளேடிளமுலைப்போகமு
மெழுதவுமாகாதே. (எரு)

வேறு.

ஆகாதுபோகமயில்விளைத்தகின்றலவன்கை
யோகாதசங்குமருளானொன்றபொதுவண்டோ. (எசு)

வேறு.

அம்பொன்றுவில்லொடிதனுணாறுதலநான்கிழவ
 னாைத்தேனென்றே
வம்பொன்றுங்குழலாளைமணம்பேசிவரவிடுத்த
 மன்னர்தூதா
செம்பொன்செய்மணிமாடத்தெள்ளாறைநந்திபதஞ்
 சேராதாளைக்
கொம்பன்றோநங்குடியிற்குறுங்காலுநெடுவளையும்
 குனிந்துபாரே. (எஎ)

வேறு.

பாவையர்பறித்துக்காக்கும் பனிமலர்சொரிந்தசெந்திக்
கோவையைநந்திகாக்குங் குளிர்பொழிற்கச்சியன்னார்
பூவையும்பந்துந்தந்து புல்லினறொ னவென்னை
மாவியல்கானம்போந்த தறிகிலேன்மதியிலேனே. (எஅ)

வேறு.

நீண்டதாங்கங்குலெங்கு நிறைந்ததாம்வாடைபொங்கி
மூண்டதாமதியினோடே மூழ்கினார்வழங்குதெள்ளா
றீண்டினார்பரியுந்தேறு மிருகையென்றொருகையோடித்
தூண்டினானந்தியிந்தத் தொண்டநாடுடையகோவே. (எகூ)

வேறு.

கோலக்கொடிமருங்கிற்குறுவிழிகொண்டலருங்குவளைநறுங் [வாய்
காலைப்பொழுதுன்னியகன்னியர்தங் கண்ணின்படிகாட்டிட்டுக்கச்சியின்
மாலைத்தெள்ளாற்றிலலங்கலனேயன்குடைக்கீ
ணருவத்தொடுவாழ்வொற்றவோநான்பெற்றநறுங்கொம்பே. (அ௰)

வேறு.

கொம்புயர்வாகிடைபோனிருகமெதிர்வந்தநந்தி
 குலவீரராகமழியத்
தம்பியொண்ணமெல்லாம்பழுதாகவென்ற
 தலைமானவீரத்துவன்
செம்பியர்தென்னர்சேரரொதிர்வந்துமாயச்
 செருவென்றபாரின்முடிமேல்
வம்புயர்தொண்டைதாருவட்டமாதர்
 வளைகொண்டதென்வண்ணமே. (அக)

ஈரடிச்செந்துறை.

வலம்வருகிரியு மிடம்வருபணிலமு மழைதவழ்கொடிமேல்
குலமயில்பாவையு மெறிகடல்வடிவமு மிவைகொண்டாயே. (அஉ)

விருத்தம்.

கொண்டலுறங்கும் பொழில்வண்டின்மாமணி
வண்டவிடுங்கடன் மல்லைகாவலனே

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதை
நூல் நிலையம்,
-600090.
மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

பண்டைமராமர மெய்தபல்லவனே
தொண்டையொற்றுவ ளவடிவடோள்வளையே. (அ௩)

வெண்பா.

தோளான்மெலியாமே யாழ்கடலுஞ்சேராமே
வாளாப்பிறவாமே வாய்த்திர் - தோளாதார்க்
குஞ்சரங்கள்சாய்க்குங் குருக்கோட்டையத்தனோ மு
மஞ்சரங்களார்தா னருள். (அ௪)

விருத்தம்.

அருளானசெங்கையிற்கே யள்ளுதோணியம்புடனெங்
கள்ளியான்சொற்
தெருளாமேநல்குதலை செய்திட்டநந்தி
தெள்ளாற்றிற்பொருதபோர்தன்னிலன்று
மிருளானமதகரியும் பாய்மாவுமிரதமுங்கொண்
டெதிர்ந்தார்தம்முன்
மருளாமேநன்கடகம் புரவானேல்வளைந்துவென்ற
மன்னரேறே. (அ௫)

வேறு.

ஏறுபாயவிளைவித்த தெல்லாங்கருங்குழற்கொங்கை
வீறுபாயக்கொடுக்கின்ற விட்டதுயர்கோவென்கின்றீர்
மாறுபாயப்படைமன்னர் மாவுந்தேருந்தெள்ளாற்றி
லாறுபாயச்சிவந்ததோ ளிணைகாவிரிநாடளவானே. (அ௬)

வேறு.

ஆயர்வாயிற்குழற்காறுகின்றிவ
ளேயுமாவின்குயிற்கோலதோ
தேயவமரர்புகழ்தேசபண்டாரிதன்
பாயன்மேல்வரல்பார்த்துநின்றுளுக்கே. (அ௭)

கலித்துறை.

நுளைவுகண்டாய்பெறுகின்றிலஞ்சென்றினிச்சொல்லவல்ல
வளைவுகண்டாய்வந்ததாதிகண்டாயடல்வேழமுண்ட
விளைவுகண்டாய்வன்னமேளிகண்டாய்விறன்மாரன்செய்ந
களைவுகண்டாய்நந்திமல்லையங்கான்றகழிக்கம்புளே. (அ௮)

வெண்பா.

அன்னையானேபுகழ்ந்தே னென்றுதேயெப்புவிக்கு
மன்னர்கோனந்தி வரதுங்கன் - பொன்முடியின்
மேல்வருகுந்தொண்டை விளைநாறுமின்னமுமென்
கால்வருடுஞ்சேடியர்தங்கை. (அ௯)

இதுவுமது.

கைக்குடமிரண்டுங் கனககும்பக்குடமு
முக்குடமுங்கொண்டான் முறியாதே - மிக்கப்புகழ்

வேய்க்காற்றினல்விளங்கும் வீரநந்திமாகிரியி
லீய்க்காற்றுக்காற்றினிடை. (௬௰)

இதுவுமது.

இந்தப்புவியி லிரவலருண்டென்பதெல்லா
மந்தக்குமுதமே யல்லவோ - நந்தி
தடங்கைப்பூபாலன்மேற் றண்கோவைபாடி
யடங்கைப்பூபாலரானார். (௬௧)

கலித்துறை.

அடிவிளக்குந்துகி லாடைவிளக்கு மரசர்பந்திப்
பிடிவிளக்கும்மெங்க ளூரார்விளக்கும் பெரும்புகழாற்
படிவிளக்குநந்தி யெங்கோன்பெரும்படை வீட்டுக்கெல்லாம்
விடிவிளக்கும்மிது வேநாங்கள்பூண்பதும் வெண்முத்தமே. (௬௨)

வெண்பா.

ஏமவணைசலிக்கு மேழாழியுங்கலக்குங்
காமவயிரி களங்கறுக்குஞ் - சோமன்
வருநந்தியானத்து மானுணைவிட்டுப்
பொருநந்திபோந்த பொழுது. (௬௩)

கலித்துறை.

ஊருமரவமுந் தாமரைக்காடு முயர்வனமுந்
தேருமுடைத்தென்பர் சீமுதநாணந்தி சீறியபின்
பூருமரவமுந் தாமரைக்காடு முயர்வனமுந்
தேருமுடைத்தென்பரோ தெவ்வர்வாழுஞ் செழும்பதியே (௬௪)

விருத்தம்.

வாழுநாளிலேயும்பரித்தவரையும்வருத்தித்
தாழுநாளிலேசரணமென்றவர்களைச்சாரு
மேழைபான்முலைவளருநாளிடைக்கிடரிழைத்து
வீழுநாளிலுங்காப்பதுன்கடனெனவிதித்தான். (௬௫)

கலித்துறை.

திருத்தேர்புகழ்நந்தித் தேசபண்டாரிதெள் ளாறைவெற்பில்
மருத்தேர்குழலிக்குக் கார்முந்துமாகின் மகுடரதநப்
பரித்தேரும்பாங்கனு மென்பட்டுதோவென்று பங்கயக்கை
நெரித்தேவயிற்றில்வைத்தே நிற்பளேவஞ்சி நெஞ்சுலர்ந்தே. (௬௬)

கட்டளை கலிப்பா.

சிவனைமுழுதுமறவாதசிந்தையான்
செயமுனிவரவுதவராதநந்தியூர்

குவளை மலரின் மதுவாரும்வண்டுகாள்
குமிழிதனியில்விளையாடுந்தும்பியே
அவனிமழைகுளிர்காலம்வந்ததே
யவருமதிசொன்னநாளும்வந்ததே
கவலைபெரிதுபழிகாரர்வந்திலார்
கணவருறவுகதையாய்முடிந்ததே. (கூஎ)

வெண்பா.

தொடர்ந்துபலரிறந்த தொண்டையந்தார்நாங்க
ணடந்தவழிகடொறுநாளும் - படர்ந்த
மலைகடாம்பட்டனைய மால்யானைநந்தி
முலைகடாம்பட்டவைபார் முன். (கூஅ)

இதுவுமது.

நம்மாவிநங்கொழுநர் நாராய்தாய்நங்கொழுநர்
தம்மாவிதம்மலதாகுந் தகைமையினாற் - செம்மாலை
நந்திசிறுகுடிநாட் டன்னமேநம்மாவி
நந்திசிறுகுடியாமே. (கூகூ)

தாழிசை.

மங்கையர்கண்புனல்பொழியமழைபொழியுங்கால
மாரவேள்சிலைகுனிக்கமயில்குனிக்குங்காலங்
கொங்கைகளுங்கொன்றைகளும்பொன்சொரியுங்காலங்
கோகனகமுல்லைநகைநகைக்குங்காலஞ்
செங்கைமுகிலனையகொடைச்செம்பொன்மேகத்
தியாகியெனுநந்தியருள்சேராக்கால்
மங்குயிருமிங்குடலுமானகால
மவரொருவர்நாமொருவரானகாலம். (ரூ)

இதுவுமது.

அன்னையருந்தோழியருமடர்ந்துபொருங்கால
மானிபோயாடிவரையாவணியின்காலம்
புன்னைகளும்பிச்சிகளுந்தங்களின்மகிழ்ந்து
பொன்பவளவாய்திறந்துபூச்சொரியுங்காலஞ்
சென்னெல்வயல்குருகினஞ்சூழ்கச்சிநாடன்
றியாகியெனுநந்திதோள்சேராக்கால
மென்னையவரறமறந்துபோனார்தோழி
யிளந்தலைகண்டேநிலவுமிளந்தெரியுங்காலம். (ரூக)

வெண்பா.

நாட்டுபுகழ்நந்திபர னீயேயெங்கையர்தம்
வீட்டிருந்துபாட விடியளவுங் - காட்டிலழும்
பேயென்றாளன்னைபிறர் நந்தியென்றார்தோழி
நாயென்றாணீயென்றே ஞான். (௱௨)

கலித்துறை.

கோட்டையிடித்தகழ் குன்றாக்கிக்குன்றக ழாக்கித்தெவ்வர்
நாட்டைமிதிக்குங் கடாக்களிற்றானந்தி நாடனையான்
றோட்டைமிகுத்தந்தத் தோழுபோய்ந்து சுருளளகக்
காட்டைமிதிக்குங் கயற்கண்ணியோசுரங் கால்வைப்பதே. (௱௩)

வெண்பா.

செந்தழலின்சாற்றைப் பிழிந்துசெழு[illegible]சிதச்
சந்தனமென்றியாரோதடவினார் - பைந்தமிழை
யாய்கின்றகோனந்தி யாகந்தழுவாமல
வேகின்றபாவியேன் மெய். (௱௪)

கலித்துறை.

சதிராகநந்தி பரன்றனைக்கூடிய தையலரை
யெதிராக்கியென்னை யிளந்தலையாக்கியென் னங்கமெல்லா
மதிராக்கித்தூசு மழுக்காக்கியங்கமங்காடிக்கிட்டப்
பதராக்கியென்னையும் பத்தாமலாக்கிய பாலகனே. (௱௫)

வெண்பா.

ஓடுகிறமேகங்கா ளோடாததேரில்வெறுங்
கூடுவருகிதென்று கூறுங்கோ - ளாடியே
நந்திச்சீராமனிட நன்னகரினன்னுதலைச்
சந்திசசீராமாகிற்றான். (௱௬)

கலிப்பா.

மண்ணெனலாமுய்ய மழைபோல்வழங்குகரத்
தண்ணுலாமாலைத் தமிழ்நந்திநன்னாட்டிற்
பெண்ணிலாவூரிற் பிறந்தாரைப்போலவரும்
வெண்ணிலாவேயிந்த வேகமுனக்காகாதே. (௱௭)

கலித்துறை.

காவியனந்த மெடுத்தான்மதன்கைக் கரும்பெடுத்தான்
மேவியனந்த வனம்புகுந்தாளினி வேட்டஞ்செய்வா

ஞவியனந்தமுண் டோவுயிர்தான்விட் டகலுமுன்னே
தேவியணந்திக் கிங்காரோடி. விண்ணப்பஞ்செய்குவரோ. (௯அ)

வெண்பா.

செய்யகமலத் திருவுக்குமுன்பிறந்த
தையலுறவு தவிர்ந்தோமே - வைய
மணக்கும்பெரும்புகழான் மானபரனந்தி
யிணக்கம்பிரிந்தநா ளின்று. (௯௯)

விருத்தம்.

வானுறுமதியையடைந்ததுன்வதன
மறுகடலபுகுந்ததுன்கீர்த்தி
கானுறுபுலியையடைந்ததுன்வீரங்
கர்ப்பகமடைந்ததுன்கரங்க
டேனுறுமலராளியிடம்புகுந்தாள்
செந்தணல்புகுந்ததுன்றேக
நானுமென்வறுமையுமெவ்விடம்புகுவே
னந்தியேநந்தயாபரனே. (௱)

நந்திக்கலம்பகம் மூலபாடம்

முற்றும்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.